# JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)

**College with Potential for Excellence**
**Reaccredited (3rd cycle) with 'A' Grade by NAAC**
**(Affiliated to Bharathidasan University)**
**TIRUCHIRAPPALLI – 620 020.**

## PRESS RELEASE

**Date: 20/03/2019**

Jamal Mohamed College (Autonomous) celebrated its **68th College Day** for Men on **20/03/2019.**The celebrations began with prayer and College songs by the students. The Principal, Dr. S. Ismail Mohideen presided over the function and presented the annual report. The Chief Guest, **Hajee. P. Abdul Kathar,** Director, Pranaam Leathers Private Limited and President, Future Scholars Academy, Chennai, delivered the 68th College day address. In his address, the Chief Guest emphasized that the students should follow the footsteps of Dr. A. P. J. Abdul Kalam towards nation building, by imbibing qualities like self confidence, will power, determination, hard work and empathy for success in their life. He also insisted that failure should not overtake one's life and students should look for motivation to develop their multiple skills. Further, he pointed out that Indians have outnumbered and excelled in many fields in various countries. Students were also advised to develop the tendency of helping others towards success. The President, Haji M.J. Jamal Mohamed Bilal, The Secretary and Correspondent Dr. A.K. Khaja Nazeemudeen, the Treasurer Haji M.J. Jamal Mohamed and the Assistant Secretary Dr. K. Abdus Samad offered their felicitations. Gold Medals, Prizes and proficiency certificates were distributed to 5 University rank holders and 181 College level toppers of various departments respectively by the Chief Guest along with the Secretary & Correspondent, Treasurer and Assistant Secretary of the College Management Committee. The Vice Principal Dr. A. Mohamed Ibraheem and the Directors Dr. K.N. Abdul Khader Nihal, Dr. K.N. Mohamed Fazil, Professor M.A. Jamal Mohamed Yasin Zubeir and Ms. J. Hajira Fathima organized the function in a grand manner. The Additional Vice Principal Dr. M. Mohamed Sihabudeen, proposed vote of thanks, which was followed by the cultural performances of the students.

**PRINCIPAL**

# ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி)

நெ.7, ரேஸ் கோர்ஸ் சாலை, காஜா நகர், திருச்சிராப்பள்ளி – 20.

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

**பத்திரிகைச் செய்தி** நாள் : 20.03.2019

திருச்சி **ஜமால் முஹம்மது கல்லூரி**யின் ஆண்கள் பிரிவினருக்கான 68வது கல்லூரி நாள் விழா இன்று (20.03.2019 – புதன்கிழமை) நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக, சென்னை Future Scholars Academy-யின் தலைவரும், பிரணாம் லெதர் பிரைவெட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநருமான ஹாஜி. பி. அப்துல் காதர் அவர்கள் கலந்துகொண்டு கல்லூரி நாள் விழா உரை நிகழ்த்தி மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். கால மாற்றத்திற்கேற்றார்போல் மாணவர்கள் தங்களின் திறமைகளை வளர்த்துக்கொண்டு பன்முக ஆளுமையுடன் உயரவேண்டும் என்றார். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களுடைய வாழ்க்கை நெறிகளை மேற்கொள் காட்டி மாணவர் சமூகம் உயர்ந்த குணத்துடன் உழைக்க வேண்டும் என்றார். வெற்றி பெற கல்வி, இறை நம்பிக்கை, தன்னம்பிக்கை, விடா முயற்சி, ஒழுக்கம், நற்குணம் வேண்டும் என்றார். பணமோ, உடல் அழகோ ஒரு மனிதனை உயர்த்துவதில்லை உழைப்பே ஒரு மனிதனை உயர்த்துகிறது என்று கூறிய சிறப்பு விருந்தினர் தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் முன்னேற வேண்டும் என்றார். மாணவர்கள் தாம் மட்டும் வெற்றி பெற்றால் போதாது தம்மோடு இருப்பவர்களையும் வெற்றி பெறச் செய்ய பாடுபட வேண்டும் என்றார். உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும், அனைத்து துறைகளிலும் சாதனை புரியும் இந்தியர்களின் எண்ணிக்கையே அதிகம் என்று கூறி உழைத்து முன்னேற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இதில் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்ற 5 மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் ஒவ்வொரு துறையிலும் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற 181 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். கல்லூரியின் தலைவர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகம்மது பிலால், செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகம்மது, உதவிச்செயலர் முனைவர் கே. அப்துஸ் சமது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் இயக்குநர்கள், முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், முனைவர் கே.என். முகமது ஃபாசில், பேராசிரியர் எம்.ஏ. ஜமால் முஹம்மது யாசீன் ஜூபைர், துணை இயக்குநர் செல்வி. ஜே. ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக, கல்லூரி முதல்வர் அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். 1000த்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் இதில் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துணை முதல்வர் முனைவர் ஏ. முகமது இப்ராஹீம் உள்ளிட்ட பேராசிரியர்கள் குழுவினர் செய்திருந்தனர். நிறைவாக, கூடுதல் துணை முதல்வர் எம். முஹம்மது சிஹாபுதீன் நன்றி கூறினார்.

முதல்வர

# JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)

**College with Potential for Excellence**
**Reaccredited (3rd cycle) with 'A' Grade by NAAC**
**(Affiliated to Bharathidasan University)**
**TIRUCHIRAPPALLI – 620 020.**

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

## 68TH COLLEGE DAY FOR MEN

### Photos




